06.07.2017

தினமணி

# மலிவு விலையில் அம்மா உரம்



மகசூலைப் பெருக்கும் வகையில் மலிவு விலையில் அம்மா உயிர் உரம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்று விவசாயத் துறை அமைச்சர் இரா.துரைக்கண்ணு அறிவித்தார்.

வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சர் துரைக்கண்ணு வெளியிட்ட அறிவிப்புகள்:

தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் மண்வளம் பேணி, மகசூல் பெருக்கும் மலிவு விலை உரங்கள் அம்மா உயிர் உரம் என்ற பெயரில் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

அரசு தென்னை நாற்றுப்பண்ணைகளின் உள்கட்டமைப்பு வசதிகள் ரூ.1.80

கோடி மதிப்பில் மேம்படுத்தப்படும்.

2017- 18- ஆம் ஆண்டில் அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் ரூ.2.67 கோடி செலவில் வலுப்படுத்தப்படும்.

பயிர் பாதுகாப்பில் புதிய முயற்சியாக சூரிய சக்தியின் மூலம் இயங்கும் 25 ஆயிரம் விளக்குப் பொறிகள் ரூ.5 கோடி செலவில் வழங்கப்படும். விவசாயிகளுக்கான பொருளீட்டுக் கடன் தொகை ரூ.3 லட்சமாகவும், வியாபாரிகளுக்கான கடன் தொகை ரூ.2 லட்சமாகவும் உயர்த்தப்படும். வேளாண் விற்பனைத் தகவல்களை விவசாயிகளுக்குத் தெரிவிக்க ரூ.7.34 கோடி மதிப்பில் மின்னணு பயிற்றுவித்தல் மையங்கள் ஏற்படுத்தப்படும். கடலூர் மாவட்டத்தில் சேத்தியாத்தோப்பு, ஸ்ரீமுஷ்ணம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் ரூ.6.10 கோடி மதிப்பில் வலுப்படுத்தப்படும். தக்காளியைப் பண்ணையளவில் மதிப்புக் கூட்டி விற்பனை செய்ய ரூ.2 கோடி மதிப்பில் பதப்படுத்தும் இயந்திரங்கள் கொண்ட 5 வாகனங்கள் வாங்கப்படும். கோயம்புத்தூர் மாவட்டம் நாச்சிபாளையம், கிணத்துக்கடவு, கிருஷ்ணகிரி மாவட்டம் ராயக்கோட்டை, பாலக்கோடு, சூளகிரி பகுதிகளில் விவசாயிகளின் விளை நிலங்களுக்கு அருகிலேயே இந்த வாகனங்களைக் கொண்டு சென்று பதப்படுத்தி மதிப்புக் கூட்டும் பொருள்களைத் தயாரிக்க வழிவகை செய்யப்படும்.

10 மாவட்டங்களில் ரூ.4.32 கோடி மதிப்பில் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் உருவாக்கப்படும்.

**உரத் தயாரிப்பு மையம்:** கோயம்புத்தூர், மதுரை, கிள்ளிகுளம் வேளாண் கல்லூரி வளாகங்களில் ரூ.5.30 கோடி மதிப்பில் நீரில் கரையும் உர உற்பத்தி மையங்கள் அமைக்கப்படும். ஊட்டச்சத்துகள் நிறைந்த காலநிலை மாறுபாடுகளைத் தாங்கி வளரக்கூடிய உயர்தரமான நெல் ரகங்கள் ரூ.2.46 கோடி மதிப்பில் உருவாக்கப்படும்.

காய்கறிப் பயிர்களில் தரமான வீரிய ஒட்டு நாற்று உற்பத்தி மற்றும் விநியோகம் ரூ.2.78 கோடி மதிப்பில் செயல்படுத்தப்படும். தோட்டக்கலைத் துறையில் காலியாக உள்ள 805 உதவி தோட்டக்கலை அலுவலர் பணியிடங்கள் நிரப்பப்படும் என்றார்.

## இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு

அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வானிலை மைய அதிகாரிகள் கூறியது: வெப்பச் சலனத்தின் காரணமாக அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

வியாழக்கிழமை நிலவரப்படி 9 இடங்களில் 100 டிகிரிக்கும் அதிகமான வெயில் பதிவானது. அதிகபட்சமாக திருவள்ளூர் மாவட்டம் திருத்தணியில் 103 டிகிரி வெயில் பதிவானது.

மழை: வியாழக்கிழமை காலை நிலவரப்படி கோவை மாவட்டம் வால்பாறை மற்றும் சின்னக்கல்லாறில் 20 மி.மீ., மழை பதிவானது. நத்தம், திருவையாறு, பொள்ளாச்சி உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்தது.

வெயில் நிலவரம் (ஃபாரன்ஹீட்டில்)

திருத்தணி 103

அதிராமபட்டினம், சென்னை (நுங்கம்பாக்கம்), மதுரை 102

வேலூர் 101

திருச்சி, பரங்கிப்பேட்டை, கரூர் பரமத்தி, கடலூர் 100

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

# 'பந்தலிலே பாகற்காய் தொங்குதடி லோலாக்கு'



தமிழகத்தில் கடும் வறட்சி நிலவுவதால் குறைந்த நீர் செலவில் அதிக மகசூல் பெறும் வகையில் மத்திய அரசின் 'வேளாண் அறிவியல் மையம்' (கிருஷ்சி விகான் கேந்திரா - கே.வி.கே.) திட்டத்தின் கீழ் முன்னோடி விவசாயிகளுக்கு 4.5 லட்சம் ரூபாய் மானியம், பயனாளிகள் பங்களிப்பு 50 ஆயிரம் ரூபாய் என மொத்தம் 5 லட்சம் ரூபாய் மதிப்பில் 'இத்தாலி தொழில்நுட்பம்' மூலம் வெயில் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் 'நிழல் வலை அமைப்பு' 500 சதுர மீட்டர் பரப்பளவில் அமைத்து சொட்டு நீர் பாசனத்தில் காய்கறிகள், பூக்கள் விளைவித்து மகசூல் பெருக்குவதே திட்டத்தின் நோக்கம். இத்திட்டத்தின் கீழ் முதல் முறையாக திண்டுக்கல் காந்தி கிராமம் பல்கலை மற்றும் மத்திய ஜவுளித்துறை அமைச்சகம் சார்பில் பல்கலை துணை வேந்தர் நடராஜன் வழிகாட்டுதல், தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுனர் செந்தில்குமார் பரிந்துரைப்படி, 20 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களின் சொந்த

நிலம் 500 சதுர மீட்டர் பரப்பளவில் நிழல் வலை அமைப்பு இரண்டு மாதத்திற்கு முன் அமைக்கப்பட்டது.

'சிம்ரன்' கத்தரி: திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி விவசாயி சக்ரபாணி நிலத்தில் நிழல் வலை அமைப்பு அமைக்கப் பட்டது. அங்கு வீரிய ஒட்டு ரகமான 'சிம்ரன்' கத்தரிக்காய் விளைவிக்கப் படுகிறது. செடியை ஊன்றி 60வது நாளில் காய்ப்புக்கு வந்துள்ளது. வைலட் நிறத்தில் காய்கள் பளபளப்பாக மின்னுகிறது. சொட்டு நீர் பாசனம் மூலம் விளைவிப்பதால் நீர் செலவு குறைவு. பூச்சி தாக்குதல் இல்லை. தேவையான வெப்பம், இயற்கை உரம் பயன்படுத்துவதால் விளைச்சல் அமோகமாக உள்ளது.சக்ரபாணி கூறியதாவது: ஒட்டன்சத்திரம் காய்கறி விதைப்பண்ணையில் இருந்து சிம்ரன் நாற்று ஒன்று 50 காசுக்கு வாங்கி நிழல் வலை அமைப்பு மற்றும் வயல்களில் பயிரிட்டுள்ளேன். தற்போது காய்ப்புக்கு வந்துள்ளது. நிழல் வலை அமைப்பின் தரையில் பாலிதீன் விரிப்பு, அதற்கு கீழ் இயற்கை உரம், தென்னை நார் கழிவு பரப்பப்பட்டுள்ளது. பாலிதீன் விரிப்புக்கு இடையே துளையிட்டு அதில் செடிகள் முளைக்கின்றன. இதனால் செடியின் பக்கவாட்டில் களை வளராமல் தடுக்க முடியும். நாள் ஒன்றுக்கு சராசரியாக 50 முதல் 100 கிலோ வரை காய்ப்பு இருக்கும். ஒரு கிலோ 45 ரூபாய் விலை போகிறது என்றார்.திண்டுக்கல் மாவட்டம் கோட்டைபட்டி விவசாயி சரவணன்: நிழல் வலை அமைப்பில் வீரிய ஒட்டு ரகமான 'அபிஷேக்' பாகற்காய்க்கொடி பயிரிட்டுள்ளேன். 85வது நாளில் இருந்து பலன் கொடுக்கிறது. பச்சை நிறத்தில் காய் அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் உள்ளது. காய்கறி கடைக்கு நாள் ஒன்றுக்கு 10 கிலோ வீதம் கிலோ 45 ரூபாய்க்கு விற்கிறேன். இயற்கை உரம், பூச்சி தாக்குதல் மிகக்குறைவு. எனினும் அவ்வப்போது வேப்ப எண்ணெய், கைத்தெளிப்பான் மூலம் இயற்கை சத்து மருந்துகள் கொடுப்பதால் காய்கள் செழிப்பாக வளர்கிறது. முறையாக பராமரித்தால் பலன் கொடுத்து கொண்டே இருக்கும் என்றார்.தமிழகத்தில் கடும் வறட்சி நிலவுவதால் குறைந்த நீர் செலவில் அதிக மகசூல் பெறும் வகையில் மத்திய அரசின் 'வேளாண் அறிவியல் மையம்' (கிருஷ்சி விகான் கேந்திரா - கே.வி.கே.) திட்டத்தின் கீழ் முன்னோடி

விவசாயிகளுக்கு 4.5 லட்சம் ரூபாய் மானியம், பயனாளிகள் பங்களிப்பு 50 ஆயிரம் ரூபாய் என மொத்தம் 5 லட்சம் ரூபாய் மதிப்பில் 'இத்தாலி தொழில்நுட்பம்' மூலம் வெயில் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் 'நிழல் வலை அமைப்பு' 500 சதுர மீட்டர் பரப்பளவில் அமைத்து சொட்டு நீர் பாசனத்தில் காய்கறிகள், பூக்கள் விளைவித்து மகசூல் பெருக்குவதே திட்டத்தின் நோக்கம். இத்திட்டத்தின் கீழ் முதல் முறையாக திண்டுக்கல் காந்தி கிராமம் பல்கலை மற்றும் மத்திய ஜவுளித்துறை அமைச்சகம் சார்பில் பல்கலை துணை வேந்தர் நடராஜன் வழிகாட்டுதல், தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுனர் செந்தில்குமார் பரிந்துரைப்படி, 20 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களின் சொந்த நிலம் 500 சதுர மீட்டர் பரப்பளவில் நிழல் வலை அமைப்பு இரண்டு மாதத்திற்கு முன் அமைக்கப்பட்டது. 'சிம்ரன்' கத்தரி: திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி விவசாயி சக்ரபாணி நிலத்தில் நிழல் வலை அமைப்பு அமைக்கப் பட்டது. அங்கு வீரிய ஒட்டு ரகமான 'சிம்ரன்' கத்தரிக்காய் விளைவிக்கப் படுகிறது. செடியை ஊன்றி 60வது நாளில் காய்ப்புக்கு வந்துள்ளது. வைலட் நிறத்தில் காய்கள் பளபளப்பாக மின்னுகிறது. சொட்டு நீர் பாசனம் மூலம் விளைவிப்பதால் நீர் செலவு குறைவு. பூச்சி தாக்குதல் இல்லை. தேவையான வெப்பம், இயற்கை உரம் பயன்படுத்துவதால் விளைச்சல் அமோகமாக உள்ளது.சக்ரபாணி கூறியதாவது: ஒட்டன்சத்திரம் காய்கறி விதைப்பண்ணையில் இருந்து சிம்ரன் நாற்று ஒன்று 50 காசுக்கு வாங்கி நிழல் வலை அமைப்பு மற்றும் வயல்களில் பயிரிட்டுள்ளேன். தற்போது காய்ப்புக்கு வந்துள்ளது. நிழல் வலை அமைப்பின் தரையில் பாலிதீன் விரிப்பு, அதற்கு கீழ் இயற்கை உரம், தென்னை நார் கழிவு பரப்பப்பட்டுள்ளது. பாலிதீன் விரிப்புக்கு இடையே துளையிட்டு அதில் செடிகள் முளைக்கின்றன. இதனால் செடியின் பக்கவாட்டில் களை வளராமல் தடுக்க முடியும். நாள் ஒன்றுக்கு சராசரியாக 50 முதல் 100 கிலோ வரை காய்ப்பு இருக்கும். ஒரு கிலோ 45 ரூபாய் விலை போகிறது என்றார்.திண்டுக்கல் மாவட்டம் கோட்டைபட்டி விவசாயி சரவணன்: நிழல் வலை அமைப்பில் வீரிய ஒட்டு ரகமான 'அபிஷேக்' பாகற்காய்க்கொடி பயிரிட்டுள்ளேன். 85வது நாளில் இருந்து பலன் கொடுக்கிறது. பச்சை நிறத்தில் காய் அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் உள்ளது. காய்கறி கடைக்கு நாள்

ஒன்றுக்கு 10 கிலோ வீதம் கிலோ 45 ரூபாய்க்கு விற்கிறேன். இயற்கை உரம், பூச்சி தாக்குதல் மிகக்குறைவு. எனினும் அவ்வப்போது வேப்ப எண்ணெய், கைத்தெளிப்பான் மூலம் இயற்கை சத்து மருந்துகள் கொடுப்பதால் காய்கள் செழிப்பாக வளர்கிறது. முறையாக பராமரித்தால் பலன் கொடுத்து கொண்டே இருக்கும் என்றார்.

## கல்லூரியில் மரக்கன்று நடும்விழா

**குன்னூர் பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரியில் ரத்ததான முகாம் மற்றும் மரக்கன்று நடும் விழா நடந்தது.**

**இந்த முகாமில், ஒருங்கிணைப்பாளர் சிவலிங்கன் வரவேற்றார். கல்லூரி செயலர் அசும்தா பேசினார். அரசு மருத்துவமனை டாக்டர் ஷ்யாம் சுந்தர் முன்னிலை வகித்து, ரத்த தானமேன்மை குறித்து பேசினார். மருத்துவர்களின் சமூக பங்களிப்பு குறித்தும், ரோட்டரி கிளப் நிர்வாகிகள் அனுராதா, லாவண்யா பேசினார்.**

**தொடர்ந்து, மாணவியரும், பேராசிரியைகளும் ரத்ததானம் செய்தனர். ரோட்டரி நிர்வாகி ஷாலினி நன்றி கூறினார். மேலும், கல்லூரி வளாகத்தில் நடந்த மரக்கன்று நடும் விழாவில்,**

**கல்லூரி முதல்வர் டாக்டர் ஷீலா மற்றும் பேராசிரியர்கள், மாணவியர் சோலை மரக்கன்றுகளை நட்டனர்.**

**குன்னூர் பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரியில் ரத்ததான முகாம் மற்றும் மரக்கன்று நடும் விழா நடந்தது. இந்த முகாமில், ஒருங்கிணைப்பாளர் சிவலிங்கன் வரவேற்றார். கல்லூரி செயலர் அசும்தா பேசினார். அரசு மருத்துவமனை டாக்டர் ஷ்யாம் சுந்தர் முன்னிலை வகித்து, ரத்த தானமேன்மை குறித்து பேசினார். மருத்துவர்களின் சமூக பங்களிப்பு குறித்தும், ரோட்டரி கிளப் நிர்வாகிகள் அனுராதா, லாவண்யா பேசினார். தொடர்ந்து, மாணவியரும், பேராசிரியைகளும் ரத்ததானம் செய்தனர். ரோட்டரி நிர்வாகி ஷாலினி நன்றி கூறினார். மேலும், கல்லூரி வளாகத்தில் நடந்த மரக்கன்று**

நடும் விழாவில், கல்லூரி முதல்வர் டாக்டர் ஷீலா மற்றும் பேராசிரியர்கள், மாணவியர் சோலை மரக்கன்றுகளை நட்டனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

# அணையில் தண்ணீர் இல்லை: காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி பாதியாக குறைந்தது



**கடும் வறட்சி, மேட்டூர் அணையில் தண்ணீர் இல்லாத காரணத்தால் காவிரி டெல்டா மாவட்டங்களில் இந்த ஆண்டு குறுவை சாகுபடி பாதியாக குறைந்துள்ளது.**

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டம் (தஞ்சை, நாகை, திருவாரூர்) அழைக்கப்படுகிறது. இதனை காவிரி டெல்டா மாவட்டங்கள் என்றும் அழைக்கப்படுவது உண்டு. இங்கு குறுவை, சம்பா-தாளடி, கோடைநெல் சாகுபடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும்.

இதற்காக மேட்டூர் அணை ஜூன் மாதம் 12-ந்தேதி திறக்கப்படும். ஆனால் கடந்த ஆண்டு வடகிழக்குப்பருவமழை பொய்த்ததாலும், காவிரியில் தமிழகத்திற்கு உரிய தண்ணீர் திறந்து விடாததாலும், மேட்டூர் அணையிலும் போதிய அளவு தண்ணீர் இல்லை. இதனால் இந்த ஆண்டு பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை.

தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டத்தில் குறுவை சாகுபடி வழக்கமாக 2 லட்சத்து 80 ஆயிரம் ஏக்கர் முதல் 3 லட்சம் ஏக்கர் வரை சாகுபடி செய்யப்படும். கடந்த ஆண்டுக்கு முந்தைய ஆண்டு வட கிழக்குப்பருவமழை அதிக அளவு பெய்தது. ஆனால் கடந்த ஆண்டு மேட்டூர் அணை தாமதமாக திறக்கப்பட்டதால் 2 லட்சத்து 55 ஆயிரம் ஏக்கரில் தான் குறுவை சாகுபடி செய்யப்பட்டது.

ஆனால் தற்போது கடும் வறட்சியால் நிலத்தடி நீர் மட்டம் அதலபாதாளத்தில் சென்று விட்டது. இருப்பினும் ஆழ்துளை கிணறுகள் மூலம் குறுவை சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு குறுவை சாகுபடி காவிரி டெல்டா மாவட்டங்களில் 1 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் வரை அதாவது வழக்கமாக நடைபெறும் பரப்பளவில் இருந்து பாதியளவு நடைபெறும் என

எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் தற்போது 1 லட்சத்து 14 ஆயிரம் எக்டேர் வரை சாகுபடி செய்யப் பட்டுள்ளது.

இன்னும் 36 ஆயிரம் ஏக்கர் வரை சாகுபடி மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான நாற்றங்காலும் தயார் செய்யப்பட்டு நடவுப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் தற்போது காவிரி ஆறு பாசன பகுதிகளையொட்டி தான் தற்போது குறுவை சாகுபடி பணிகள் அதிக அளவில் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

இது குறித்து விவசாயிகள் கூறுகையில், "தற்போது நிலத்தடி நீர் மட்டம் ஆற்றங்கரையையொட்டி உள்ள பகுதிகளில் கூட 300 அடிக்கும் கீழே சென்று விட்டது. குறுவை நடவுப்பணிகள் பெரும்பாலும் ஜூலை மாத இறுதிக்குள் முடிவடையும். தற்போது தென்மேற்கு பருவமழையால் மேட்டூர் அணைக்கு இன்னும் தண்ணீர் எதிர்பார்த்த அளவு வரவில்லை. இதனால் தற்போது வழக்கமாக குறுவை சாகுபடி நடைபெறும் பரப்பளவை விட பாதி அளவு தான் மேற்கொள்ளப்படுகிறது. இதுவும் முற்றிலும் ஆழ்குழாய் கிணறு பாசன வசதிகளை கொண்ட இடங்களில் மட்டுமே மேற்கொள்ளப்படுகிறது" என்றார்.

## வனப்பகுதிகளில் வனவிலங்குகள் மட்டுமில்லாமல் இயற்கை வளங்களையும் பாதுகாப்பது அவசியம்



ஊட்டி தீட்டுக்கல் பகுதியில் உள்ள மத்திய அரசின் இந்திய மண் மற்றும் நீர்வள பாதுகாப்பு நிறுவன ஆராய்ச்சி மையத்தில் வன சரகர்களுக்கு 'வனப்பகுதிகளில் நீர்ப்பிரி முகடுப்பகுதி மேலாண்மை' குறித்த 12 நாள் திறன் மேம்பாட்டு பயிற்சியின் தொடக்க நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த பயிற்சியில் மராட்டியம், கர்நாடகா, குஜராத் ஆகிய மாநிலங்களை சேர்ந்த 38 வன சரகர்கள் கலந்துகொண்டு உள்ளனர்.

இந்திய வேளாண் அமைப்பு ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானி ஆசாத் சிங் பயிற்சியை தொடங்கி வைத்து பேசியதாவது:–

இந்தியாவில் வனப்பகுதிகளில் உள்ள மண் மட்டும் தான் மாசுபடாமல் உள்ளது. மற்ற பகுதிகளில் தொழிற்சாலை கழிவுகள், ஆலை கழிவுகள் ஆகியவற்றால் மண் மட்டுமல்லாமல் நிலத்தடி நீரும் மாசடைந்து உள்ளது. எனவே, வனச்சரகர்கள் வனப்பகுதிகளில் வாழ்ந்து வரும் வனவிலங்குகளை மட்டும் பாதுகாக்காமல் அங்குள்ள மண் மற்றும் இயற்கை வளங்களை பாதுகாப்பது மிக அவசியம்.

மண் மற்றும் நீர்வள பாதுகாப்பு முறைகளை சரியான முறையில் கையாண்டு, வனப்பகுதிகளில் உள்ள நீரை சிறந்த வகையில் பயன்படுத்தி காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள வேண்டும். நவீன தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்தி மழைநீர் சேகரிப்பு வழிமுறைகளை வனப்பகுதிகளில் செயல்படுத்துவது வன சரகர்களின் பணியாகும்.

மேலும் ஊட்டி அருகே உள்ள நஞ்சநாடு கிராமத்தில் நீர்ப்பிரி முகடுப்பகுதியில் வனச்சரகர்களுக்கு களப்பயிற்சி அளிக்கப்படுகிறது. எனவே, வனச்சரகர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களது திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.